# பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை





# தலைவர் உரை

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களுக்கு கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்

தேவனுடைய பெரிதான கிருபையினால் 2015 ஆம் வருடத்தின் 10ஆம் மாதத்தில் பிரவேசிக்கும் பாக்கியத்தை தேவன் நமக்கு தந்திருக்கிறபடியால் கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

கடந்த மாதத்தில் சபையின் ஊழியங்கள், ஆராதனைகள் மற்றும் விஷேசித்த கூடுகைகளில் தேவ பிரசன்னமும் தேவ வழிநடத்துதலும் இருந்தபடியாலும், நம் ஒவ்வொருவருடைய ஜெபவாழ்க்கை, தனிபட்ட ஆவிக்குரிய வாழ்க்கையிலும், நம்மோடு கூட தேவ நடத்துதல் இருந்தபடியினாலும் தேவாதி தேவனுக்கு நன்றி செலுத்தவோம்.

யாக்கோபுக்கு விரோதமான மந்திரவாதம் இல்லை, இஸ்ரவேலுக்கு விரோதமான குறி சொல்லவதும் இல்லை-(எண் 23:23)

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மரித்து பின்பு மூன்றாம் நாள் விழித்தெழுந்து, துரைத்தனங்களையும், அதிகாரங்களையும், சாத்தானிடமிருந்து, உரித்துகொண்டார். ஆனபடியால் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவபட்டு உன்னதமானவருடைய மறைவுக்குள் இருக்கிறவர்களுக்கு விரோதமாக, எந்த மந்திரவாதமும் இல்லை,குறி சொல்வதும் இல்லை.

இந்த வாக்குதத்தத்தை கிறிஸ்து மூலமாய் நமக்கு தேவன் அருள் செய்திருக்கிறபடியால் நாம் தைரிமாய் இந்த வாக்குத்தத்தத்தை சொல்லுவோம். நாம் அவருடைய ஜனம் மாத்திரமல்ல அவருடைய பிள்ளைகள் என்ற அந்தஸ்தையும் பெற்று இருக்கிறோம். அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்று கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்.(யோ 1:12)

தேவன் என்னென்ன செய்தார் என்று கொஞ்ச காலத்திலே யாக்கோபையும், இஸ்ரவேலையும் (தேவ ஜனங்களை) குறித்து சொல்லப்படும் - எண் 23:23

3 தேவன் நம்மை தேவ பிள்ளைகளை ஆசீர்வதிக்கும்படியாகதான் வைத்திருக்கிறார், ஆனபடியால் சாபமான வார்த்தைகளை பேச வேண்டாம்.மற்ற சகோதர சகோதரிகளையோ, வேலை ஸ்தலத்தில் மற்றவர்களையோ, குடும்பத்தினரையோ நாம் ஆசீர்வதிக்கும்படி எப்பொழுதும் பேசுவோம்.

கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்கு திறந்திருக்கிறது (நீதி 34:15)

தேவன்தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக!

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரன்

R. ரவிச்சந்திரன்

## இவைகளினால் என்னை உயிர்ப்பியும் என்று சங்கீதங்காரன் கர்த்தரை வேண்டுகிறான்

1.மண்ணோடு ஒட்டிக்கொண்டிருக்கிற என் ஆத்துமாவை,உமது வசனத்தின்படி என்னை உயிர்ப்பியும் (சங் 119-25)

2.மாயையைப் பாராதப்படி நீர் என் கண்களை விலக்கி, உமது வழிகளில் என்னை உயர்ப்பியும்.(சங் 119-35)

3. இதோ, உம்முடைய கட்டளைகள்மேல் வாஞ்சையாயிருக்கிறேன்; உமது நீதியால் என்னை உயிர்ப்பியும்.˙.(சங் 119-40)

4. உம்முடைய வாக்கின் சாட்சியைக் காத்து நடக்க.உமது கிருபையின்படியே என்னை உயிர்ப்பியும்.˙.(சங் 119-88)

5.நான் மிகவும் உபத்திரவப்படுகிறேன்; கர்த்தாவே, உம்முடைய வசனத்தின்படியே என்னை உயிர்ப்பியும்.˙.(சங் 119-107)

6.எனக்காக நீர் வழக்காடி என்னை மீட்டுக்கொள்ளும்; உம்முடைய வார்த்தையின்படியே என்னை உயிர்ப்பியும். (சங் 119-154)

7.கர்த்தாவே, உம்முடைய இரக்கங்கள் மிகுதியாயிருக்கிறது; உமது நியாயங்களின்படி என்னை உயிர்ப்பியும். (சங் 119-156)

8.இதோ, உம்முடைய கட்டளைகளை நேசிக்கிறேன்; கர்த்தாவே, உமது கிருபையின்படி என்னை உயிர்ப்பியும்.(சங் 119-159)

தொகுப்பு – சகோதரர். ஆல்பர்ட்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு தாங்கள் நேர்ந்து கொண்ட காணிக்கைகளை, திக்கற்ற பிள்ளைகளின் ஊழியத்திற்கென்று சகோதரர் எபிநேசர் அவர்களிடத்திலும், இந்திய தேச ஊழியர்களை தாங்கும் ஊழியத்திற்கென்று சகோ. ஆரோக்கியராஜ் அவர்களிடத்திலும், போக்குவரத்து(Transport) ஊழியத்திற்கென்று சகோ. வில்ஸன் அவர்களிடத்திலும், தங்களது காணிக்கைகளை கொடுத்து ஊழியத்தை தாங்கும்படி பணிவண்புடன் கேட்டு கொள்கிறோம் (மறவாமல் ரசீது பெற்று கொள்ளவும்)

## தேவனுக்கே மகிமை
## தேவனுடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமையுண்டாவதாக!

இந்த செய்திமலர் ஊழியத்தின் மூலம் உங்களை சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இந்த நாளில் ஆண்டவர் உங்களோடு பேசுகின்ற வார்த்தை என்னவென்றால் ஆதி -19-17 நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ என்றார்.

பிரியமானவர்களே ! சோதோம், கொமாரா, பட்டணம் மிகுந்த செழிப்பு உண்டான பட்டணம் . எகிப்து தேசத்து போலவும், கர்த்தருடைய தோட்டத்தை போலவும் இருந்தது என்று வேதம் காட்டுகிறது. இந்த நேரம் எப்படி செழிப்பாக இருந்ததோ! அதே போல் ஜனங்களிடத்தில் பாவமும் செழிப்பாக இருந்தது.

இந்த நேரத்தில் லோத்து என்கிற நீதிமான் இருந்தான். அந்த மனிதனை பார்த்து ஆண்டவர் சொல்லுகிறார். நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ என்று ஆண்டவர் சொல்லுகிறார். நான் சோதோம், கொமோரா பட்டணத்தை அக்கினியினாலும், கந்தகத்தினாலும் அழிக்க போகிறேன். நீ உன் ஜீவன் தப்ப மலைக்கு ஓடிப்போ என்றார்.பட்ணத்தை

பிரியமானவர்களே! அன்றைக்கு சோதோம், கொமோரா பட்டணத்தை தேவன் அக்கினியினாலும், கந்தகத்தினாலும் அழித்தார். ஆனால் இன்றைக்கு சையின்டிஸ்ட் இந்த இடத்தை சவக்கடல் அருகே கண்டு பிடித்து அதன் மண்ணை எடுத்து ஆராய்ச்சி செய்த போது அந்த மண்ணில் 95% சல்பர் கலந்து இருக்கிறது என்று சொல்கிறார். ஆனால் ஒரு மனிதனால் 35% கந்தகத்தை கூட தாங்க முடியாது என்று மருத்துவர்கள் கூறுகிறர்கள்.

பிரியமானவர்களே அன்றைக்கு சோதோம், கொமோராவை கந்தகம் கலந்த அக்கினியால் அழித்தார். அது போல இந்த பூமியும் அக்கினிக்கு இரையாக வைக்கபட்டிருக்கிறது என்று வேதம் 2 பேதுரு 3-7ல் கூறுகிறது. அந்த அக்கினி அழிவில் இருந்து நாம் ஒவ்வொருவரும் தப்பித்து கொள்ளும்படி கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நம்மை பார்த்து சொல்லுகிறார் நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ என்று கூறுகிறார்.

### எந்த மலைக்கு ஓட வேண்டும் என்று திகைத்து போய் இருக்கிறீகளா!

தேவ ஜனங்களே உங்கள் பாவங்களுக்காகவும், அக்கிரமங்களுக்காகவும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அடிக்கபட்டு தன் ஜீவனை கொடுத்த கொல்கதா மலைக்கு ஓடிப்போ (மத் 27-23,மாற்-15-22, யோவான் -19-17)

சோதோம் கொமோரா பட்டணத்தை அழிப்பதற்கு காரணம் என்னவென்றால் பாவம் என்று பார்க்கிறோம். அதே போல் இந்த பூமியிலும் ஒரே மனிதன் ஆதாமின் நிமித்தம் பாவம் பிரவேசித்து பெருகிக்கொண்டே இருக்கிறது.

பாவிகளை அழிப்பதற்கு கர்த்தருடைய நாள் கொடூரமும், மூர்க்கமும் உக்கிர கோபமாய் வருகிறது என்று ஏசாயா 13-19ல் வாசிக்கிறோம். பாவத்தினிமித்தம், அக்கிரமத்தின் நிமித்தமும் கண்டிப்பேன் என்று ஆண்டவர் 2 பேதுரு 2:6-9ல் வாசிக்கிறோம். தேவ பக்தியில்லாதவர்களை நியாயம் தீர்க்க போகிறார் என்று பார்க்கிறோம். ஆகையால் நீங்கள் அழியாதபடிக்கு கொல்கதா மலைக்கு ஓடிப்போங்கள்.

அங்கே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இரத்தம் முழுவதும் எனக்காக சிந்தப்பட்டது. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கின்றது (1 யோ 1-7) ஆகவே நாம் அழியாதபடிக்கு ஒவ்வொரு நாளும் இயேசுவே உம்முடைய இரத்தத்தால் என் பாவங்களை கழுவும், என் அக்கிரமங்களை என்னை விட்டு நீக்கும் என்று அறிக்கை

செய்,என்னை பரிசுத்தமாக்கும் என்று கெஞ்சி மன்றாடுங்கள், அப்பொழுது நீங்கள் அழியாதபடி காக்கபடுவீர்கள்.

## அடுத்து நாம் போக வேண்டிய மலை மறுரூபமலை

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பேதுருவையும், யோனாவையும், யாக்கோபையும், கூட்டிக் கொண்டு ஜெபம் பண்ணுவதற்கு ஒரு மலைக்கு கூட்டிகொண்டு போனார் அங்கே மறுரூபமானார். பழைய ஏற்பாடு புத்தகத்தில் உள்ள தாபோர் மலைதான் இயேசு மறுரூபமான இந்த மலை என்று வேத வல்லுனர்கள் கூறுகிறார்கள் (நியா 4:14)

தாபோர் என்பதற்கு உடைக்கபடுதல் அல்லது நொறுக்கபடுதல் என்று அர்த்தம். இன்று மறுரூபமலையில் இயேசு கிறிஸ்து நமக்காக தாம் பாடுபடபோவதையும், மரிக்கபோவதையும்,தேவ சித்தம் நிறைவேற தம்மை ஒப்பு கொடுக்க போவதைப்பற்றி மோசே, எலியாவோடு பேசிக்கொண்டிருந்தார்.

அதே போல நாமும் நம்முடைய சுய சித்தம், சுய சிந்தை, மற்றும் நம்முடைய சரீரத்தையும், தேவ சித்தத்திற்கு ஒப்பு கொடுத்து, தேவனுக்காக மரிக்கவும் நாம் ஆயத்தமாகும்போது இயேசு கிறிஸ்துவை மறுரூபமாக்கிய தேவன்தாமே நம்மையும் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் மறுரூபபடுத்துவார்.

ஆகையால் நீங்கள் அழியாதபடிக்கு மறுரூபமலைக்கு ஓடிப்போ என்று இயேசுகிறிஸ்து கூறுகிறார். மேலும் இயேசு கிறிஸ்து அந்த மலையில் அதிகமாக ஜெபித்தவராக அடிக்கடி மலைக்கு சென்று ஜெபிப்பவராக காணப்பட்டார். நாமும் உள்ளம் உடைக்கப்பட்டு ஆவியில் அதிகமாக ஜெபிக்க வேண்டும். அப்படி ஜெபித்தால் மாத்திரமே அழிவுக்கு தப்ப முடியும்.

லூக்கா 21:36 ஆகையால் இனிச்சம்பவிக்க போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கபாத்திரவான்களாக எண்ணபடுவதற்கு எப்போதும் ஜெபம் பண்ணி விழித்திருங்கள் என்றார்.

அங்கே நாம் ஒரு மனிதனாக நிற்க முடியாது ஆவியானவரின் அபிஷேகம் தேவை (I கொரி 14:15ல் வேதம் கூறுவது போல நாம் ஆவியில் விண்ணப்பம் பண்ண வேண்டும். நாம் ஆவியில் விண்ணப்பம் செய்யும் போது ஆவியானவர் நமக்கு எப்படி ஜெபிக்க வேண்டும் என்று கற்று கொடுக்கிறார், நமக்காக வேண்டுதல் செய்கிறார். (ரோமர் 8:26-27) மேலும் நாம் ஆவியானவரின் துணையுடன் செய்யும் ஜெபம் தேவ சமூகத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.

மேலும் தேவ ஆவியானவரின் உதவியுடன் ஜெபம் ஆக கூட வாய்ப்புகள் அதிகம் (எ-கா லூக் 18:10) ஆவியானவர் இல்லாத ஜெபத்தில் அதிக அலப்புகின்ற வார்த்தைகளும், சுயசிந்தைகளும் மேலோங்கும், இறுதியில் உங்கள் ஜெபம் பரிசேயனின் ஜெபம் போல ஆகிவிடும்.

ஆகவே நீங்கள் உங்கள் பாவங்கள் நீங்கி, உங்களை சுத்திகரிக்கின்ற கல்வாரி மலைக்கு (இயேசுவை நோக்கி) நீங்கள் அழியாதபடிக்கு ஓடிப்போங்கள். நீங்கள் ஜெபம் பண்ண ஜாக்கிரதையுள்ளவர்களாய் இருந்து ஆவியானவரின் உதவியுடன் மறுரூபமலைக்கு ஓடி மறுரூபம் அடைந்து நித்திய ஜீவனை பெற்று கொள்ளுங்கள்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சீக்கிரம் வருகிறார். அவருடன் மறுரூபமாக்கி எடுத்து கொள்ளப்பட நாமும் ஆயத்தபடுவோம். பிறரையும் ஆயத்தபடுத்துவோம் .(குறிப்பு: கொடுக்கப்பட்ட வசன குறிப்புகளை எடுத்து படிக்கவும் அது உங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும்)

கர்த்தர்தாமே உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக ! ஆமென்.

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரன்

**D. ஆசீர்வாதம்**

# மார்டின் லூத்தர்

மார்டின் லூத்தர் சமய புரட்சி செய்த நாட்களில் பாவ மன்னிப்பு சீட்டை குறித்து தன் எதிர்ப்பை பல விதத்தில் காட்டினார். இதற்கு சில படித்தவர்களை தனக்கு உதவி செய்யும்படி அவர்களோடு தனக்கு நட்பை உண்டாக்கி கொண்டார். மார்டின் லூத்தர் தாக்கத்தை ஏற்றுக் கொண்டு இவருக்கு அநேகர் ஆதரவு காட்டினர். அம்மக்களில் பிரட்ரிக் பிலிப்பு என்பவரும் ஒருவர்.

பிரட்ரிக் பிலிப்பு என்பவர் பூரணமான திருப்பொருட்களை சேர்த்து வைத்திருந்தார். 1516ல் சகல பரிசுத்தவான்கள் திருநாளில் சபை மக்கள் அனைவரையும் இவைகளை தரிசிக்க உதவி செய்தார். 1509ல் இவரிடத்தில் 1.ஜெரோம் என்பவரின் ஒரு பல் 2.பரி.அகஸ்டியன் என்பவரின் 4 எலும்புகள் 3. கன்னி மரியாளின் 432 முடிகள் 4. அவரது மேலாடையின் 3 துண்டுகள. 5. அரைகச்சையின் 4 துண்டுகள். 6. இயேசுவின் இரத்தகரைகள் படிந்த முக்காட்டின் 7துண்டுகள் 7. அவர் பிறந்த போது சுற்றப்பட்டிருந்து கற்றை துணிகளில் ஒன்று. 8 பசு கொட்டிலின் 13 துண்டுகள். 9.ஒரு வைக்கோள் சுருள் 10 சாஸ்த்திரிகளால் வைக்கப்பட்ட பொன்னின் ஒரு துண்டு. 11 வெள்ளை போலத்தில் 3துண்டு. 12 தாடை மயிலின்ஒரு பிடி 13. கரத்தில் கடாவப்பட்ட ஆணிகளில் ஒன்று 14 . இறுதி பந்தியில் பரிமாறப்பட்ட அப்பத்தில் ஒரு துண்டு. 15 அவர் பரம் ஏறிய போது சுவர் காலூன்றி நின்ற கல்லில் ஒன்று. 16. இவற்றோடு மோசேக்கு காணப்பட்ட எரிகிற செடியின்கிளை ஒன்றும் இருந்தது. இவைகளை வைத்து மேற்கூறிய தினத்தில் கட்டணம் செலுத்தி பார்க்கும்படி செய்தார். இதனால் பிரட்ரிக் பிலிப்பு என்பவருக்கு ஏகப்பட்ட வசூலானது. இது அவர் அரண்மனை கட்டுவதற்கும் நடத்தி வந்த பல்கலை கழகத்துக்கு செலவுக்கு பெரிதும் உதவியாக இருந்தது. இதனை லுத்தர் வெளியரங்கமாக கண்டிக்க ஆரம்பித்தார். இதற்கு பெய்ண்ட்டன் என்ற ஆசிரியர் ஆதரித்து அதற்கு சரியான காரணத்தை விளக்கினார். ஆயினும் பாவமன்னிப்பின் சீட்டு விற்றதால் ஏமாற்றம் அடைந்த பக்தர்கள் இதையும் கட்டணம் செலுத்தி பார்ப்பதால் இவற்றையும் விக்கிரகமாக மாற்றி வணக்கத்திற்குரிய பொருட்களாக்கி விட கூடாதென்று எச்சரிப்பு செய்தார்.

என்றாலும் தற்போதைய ரோமன் கத்தோலிக் சபையரால் இப்பொருட்கள் பரிசுத்த பொருட்களாக என்னப்பட்டு வணக்கத்திற்குறியதாக இருப்பது நமக்கு வருத்தத்தையே தருகிறது. லூத்தரின் கொள்கைகளை ஏற்று கொண்டவர்கள் புரட்சியாளர்கள்(அ) புராட்டஸ்டண்ட்ஸ் என்று அழைக்கபட்டார்கள். அவர்களுக்குள் புரட்சி செய்து விக்கிரக வணக்கத்தை தவிர்க்கும் புரட்டஸ்டண்ட்ஸ்கள் எழும்பினால்தான் மார்க்கம் உறுப்படியாகும். மக்களும் பரலோகம் செல்லும் பாதையை அறிவர். கர்த்தர்தான் கண்களை திறக்க வேண்டும்

# இயேசு இன்றும் குணமாக்குகிறார்

இன்றைய மருத்துவ உலகம் மனிமனை வியக்க வைக்கும் அளவுக்கு முன்னேரியுள்ளதை யாவரும் அறிவோம். தினந்தந்தியில் தீர்க்கமுடியாத நோயை கடவுள் நம்பிக்கை தீர்க்குமா? என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வெளியாகி இருந்தது. அதில்காணபட்ட சில பகுதிகளை வாசகர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். மருத்துவ துறையில் குணமாக்க முடியாத நாள்பட்ட வியாதி,மன உளைசல் போன்றவற்றை கடவுள் நம்பிக்கை, தியானம் போன்றவற்றால் குணபடுத்த முடியும் என்ற நம்பிக்கை இப்போது மக்களிடையே பரவிவருகிறது. இந்த நம்பிக்கை டாக்டர்களையும் (பகுத்தரிவாளர்களைதான்) கடவுள் நம்பிக்கை. தியானம் போன்றவற்றின் பக்கம் திரும்பவே செய்துள்ளது. கடவுள் நம்பிக்கை ஜெபம் பண்ணுதல் போன்றவை உண்மையிலேயே உடல் நலத்தை பாதுகாக்குமா? என்ற கேள்விக்கு ஆச்சர்ய பட தக்கதாக பல ஆதாரங்களின் மூலம் டாக்கடர்கள் விஞ்ஞான பூர்வான உண்மைகளை கூறியுள்ளனர். மருத்துவத்தின் மூலம் குணபடுத்த முடியாத பல நோய்களை ஜெபித்தலின் மூலம் குணபடுத்த முடியும் என்பது பல்வேறு ஆய்வுகளின் மூலம் தெரிய வருகிறது.

அமெரிக்காவிலுள்ள சான்பிரான்சிஸ்கோ நகரில் உள்ள கலிபோர்னியா பசிபிக் மெடிகல் நிலையத்தின் இயக்குனர் டாக்டர் எலிசபெத் டார்ங் தனது நிலையத்தக்கு வரும் நோயாளிகளுக்கு ஜெபம் பண்ண ஒரு பிரார்த்தனை குழுவையே நியமித்துள்ளார். எயட்ஸ் வியாதியுள்ள இருபது பேருக்காக ஜெபம் செய்யப்பட்டதில் பத்து பேர் குணமடைந்ததாக ஜெபக்குழு தலைவர் சொராக்கொ என்பவர் கூறுகிறார். முப்பது வருடங்களுக்கு முன் எந்த அமெரிக்க டாக்டரும் பிரார்தனையில் நம்பிக்கை வைக்க வெளிபடியாக கூறினதில்லை. ஆனால் தற்போது தியானத்தால் உண்மைகளையும் கடவுளையும் காணலாம் என்ற நம்பிக்கையை விரட்ட முயற்சித்து மேற்கத்திய நாட்டு மருத்துவம் முற்றும் தோல்வியடைந்து விட்டது. மருத்துவத்தில் நம்பிக்கை வைப்பதைவிட பிராத்தனையில் நம்பிக்கை வைப்பது மேல் என்கிற எண்ணம் டாக்டர்களிடமும் பரவியுள்ளது. தற்போது அமெரிக்காவில் பல மருத்துக் கல்லூரிகளில் மருத்தவ படிப்பேடு ஆத்மீகம் பற்றிய படிப்பும் சேர்க்கபட்டு வருகிறது.

அமெரிக்காவிலுள்ள டார்ட் மருத்துவ மையத்தில் 1995 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட ஒரு கணக்கெடுப்பில் இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்ட 232 நோயாளிகளில் கடவுள் நம்பிபக்கையுள்ள நோயாளிகளே பெரும்பாலும் குணமடைந்துள்ளனர். கடவுள் நம்பிக்கை இல்லாத நோயாளிகள் குணமாகவில்லை என்று தெரியவருகிறது. கடந்த 30 ஆண்டுகளாக நடைபெற்ற ஆராய்சியில் கிறிஸ்தவ தேவாலங்களுக்கு செல்பவர்களுடைய இரத்த அழுத்தம் தேவாலயங்களுக்கு செல்லாதவர்களுடைய இரத்த அழுத்தத்தைவிட குறைவு என்பது நிரூபிக்கபட்டுள்ளது. மாரடைப்பு போன்ற நோய்கள்

தேவாலயங்களுக்கு போகாதவர்களுக்கு ஏற்பட அதிக வாய்ப்புண்டு. தேவாலயங்களுக்கு போகிறவர்களுக்கு இவை ஏற்பட வாய்புகள் மிகவும் குறைவு என்று அறியபட்டுள்ளது ஏனெனில் தேவாலயங்களுக்கு செல்வதால் மன அமைதி, மனோதிடம், ஆகியவை கிடைப்பதால் மாரடைப்பு போன்ற நோய்கள் ஏற்படுவது குறைவு.

இன்னும் இவ்வாராட்சியின் பலனாக அமரிக்க தேசிய முதியோர் மையத்தில் எடுத்த கணக்கெடுப்பின்படி 4000 முதியோர்களில் தேவாலயங்களுக்கு வழக்கமாக போவோர்களுக்கு மனசோர்வு ஏற்படல் மிகவும் குறைவு என்றும் தேவாலயங்களுக்கு போகாதவர்களிடையே அதிகம் உண்டாயிருக்கிறது என்றும் கண்டுபிடிக்கபட்டுள்ளது. ஜெப தியானத்தை ஒழுங்காய் கடைபிடிப்பவர்களில் 75 சதவிகிதம் பேர் தூக்கமின்மை போன்ற அவதியில் இருந்து விடுபட்டு நிம்மதியாக தூங்குகிறார்கள் என்றும் கர்ப்பம் தரிக்காத பெண்களில் 35 சதவிகிதம் பேருக்கு கர்ப்பம் தரித்ததாகவும் தீராத நோயாளிகள் என்று வகைபடுத்தப்பட்ட 34 சதவிகிதம் நோயாளிகள் வலியை குறைப்பதற்கு போதை மருந்து ஊசி போடுவதை நிறுத்திவிட்டார்கள் என்றும் ஆராய்சியில் தெரிய வந்துள்ளது.

கடைசியாக அமெரிக்காவில் சமீபத்தில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி 1004 பேர்களில் 82 சதவிகிதம் பேர் ஜெபம் செய்வதில் பலன் உண்டு என்று கடவுள் நம்பிக்கை உள்ளவர்களாகவும் 13 சதவிகிதம் பேர் நம்பிக்கை தெரிவிக்காதவர்களாயும் உள்ளனர் என்கிறது. மற்றவர்களுக்காய் ஜெபம் பண்ணுவதால் நோய் குணமாகும் என்று 73 சதவிகிதம் பேர் நம்பிக்கை தெரிவித்தும் 21 சதவிகிதம் பேர் நம்பிக்கை நம்பிக்கையில்லை என்று தெரிவித்துள்ளனர். மற்றும் ஒரு கணக்கெடுப்பில் 64 சதவிகிதம் டாக்டர்கள் வியாதியஸ்தர்களுக்காய் ஜெபம் பண்ணுவோம் என்றும் 27 சதவிகிதம் டாக்டர்கள் அவ்வாறு செய்ய மாட்டோம் என்றும் நம்பிக்கை கருத்து தெரிவித்துள்ளனர். மூன்றில் இரண்டு பங்கு டாக்டர்கள் கடவுள்பால் நம்பிக்கை வைத்துள்ளனர். ஜெபமே ஜெயம், ஜெபம் செய்கிறவர்கள் தேவனை தன் வாழ்க்கையில் இழுக்கிறார்கள், ஜெபம் தேவனை மனிதனோடு இணைக்கிறது. ஜெபம் தேவ ஆீர்வாதங்களை மனிதர்களுக்கு கொண்டு வருகிறது, ஜெபிப்போம் ஜெயம் பெறுவோம்.

**2015 ஆம் ஆண்டு சபையின் வாக்குத்தத்தம்**

**........நீங்கள் சொல்லுகிறபடியே சேனைகளின் தேவனாகிய கர்த்தர் உங்களோடே இருப்பார்.**
**(ஆமோஸ் 5:14)**

# 2015 – செப்டம்பர் மாத விடைகள்

1. ஸ்திரியுடனே விபசாரம் பண்ணுகிறவன் – நீதி மொழிகள் 6:32

2. மன மகிழ்ச்சி ---- நீதி மொழிகள் 15:13

3. சாலொமோன் -- நீதி மொழிகள் 13:13

4. புத்திமதிகளை காத்து கொள்கிறவன் --- நீதி மொழிகள் 10:17

5. நீதி மொழிகள் 2 : 17,19

6. கிருபையும் சத்தியமும் --- நீதி மொழிகள் 3:3

7. நீதி மொழிகள் 23:7

8. நீதி மொழிகள் 20:29

9. நீதி மானுக்கு ஒரு கேடும் வராது ----நீதி மொழிகள் 12:21

10. பரியாசக்காரர்கள் பட்டினத்தில் தீ கொளுத்தி விடுகிறார்கள்--- நீதி மொழிகள் 29:8

11. மாறுபாடுவுள்ளவன் கர்த்தருக்கு அருவருப்பானவன், நீதிமான்களோடே அவருடைய இரகசியம் இருக்கும் ----- நீதி மொழிகள் 3:32

12. நீதி மொழிகள் 7:10,23

13. நீதி மொழிகள் 27:7

14. நீதி மொழிகள் 23:32

15. நீதி மொழிகள் 27:22

## 2015 செப்டம்பர் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சுகந்தி தம்புக்குமார்
Sis. மரகதம் ஸ்டீஃபன்
Sis. டெய்ஸி எபிநேசர்
Sis. ஜோன் அசோக்குமார்
Sis. லீம்சியா
Sis. மரியா குளோரி தாஸ்
Sis. மெர்சிலின் தயா இயேசு ரெத்தினம்
Sis. லதா கிறிஸ்டோபர்

Bro. ஜாண்ஸன்
Bro. கிறிஸ்டோபர். M
Bro. ஜாண்
Bro. ஆல்பர்ட்

## "உனக்கு பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும் ."
## (சங்கீதம்– 128:2)

### இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வி. ஷாலோம் கிரேஸ்
செல்வி. கீதா கொம்மையன்
செல்வி. லின்டா வில்கின்சன்
செல்வி. பிரியங்கா சதீஷ்குமார்

செல்வன். ஜோசப் அருள்செல்வன் தர்மர்
செல்வன். ஜேசன் ஆல்ப்ஸ் ஜேம்ஸ்
செல்வன். ஜோஸ்வா ராமர்
செல்வன். ரோஷன் அசோக்குமார்
செல்வன். தினேஷ் அருள்மணி
செல்வன். எபின் கேட்சில் ஜெயக்குமார்

சகோதரி. லின் டஃப்னி ஜெபசிங்
சகோதரி. ஜான்சி அற்புதராஜ்
சகோதரி. கஸ்தூரி மனோகரன்

சகோதரி. சுதா மனோகரன்
சகோதரி. ஜெபா
சகோதரி. மரகதம் ஸ்டீபன்
சகோதரி. பியூலா மெர்ஸ்சி ஜெகநாதன்

சகோ. ஸ்டாலின் சுனில் வின்ஸ்
சகோ. வர்கீஸ்
சகோ. டேனியல் மாணிக்கம்
சகோ. மார்க் ஆன்டனி
சகோ. ஜாண்வெஸ்லி
சகோ. வில்கின்ஸ் தினகரன்
சகோ. தம்புகுமார் டென்னிஸ்
சகோ. ஜெயக்குமார் ஞானதாஸ்
சகோ. ஆஸ்டின் முத்தையா
சகோ. விஜய் இம்மானுவேல்

உன்னை இந்த ஜனத்துக்கு எதிரே அரணான வெண்கல அலங்கமாக்குவேன்; (எரே.15:20)

### இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

திருமதி ஶ்ரீ திரு. குமாரசாமி
திருமதி ஶ்ரீ திரு. செங்குட்டுவன்
திருமதி ஶ்ரீ திரு. செபாஸ்டின் ஜோசப்

### 2015 ஆம் ஆண்டின் சபையின் வாக்குத்தத்தம்

**..நீங்கள் சொல்லுகிறபடியே சேனைகளின் தேவனாகிய கர்த்தர் உங்களோடே இருப்பார்**

(ஆமோஸ் 5:14)

# 2015 அக்டோபர் மாத நிகழ்ச்சி நிரல்

**ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5:00 முதல் 6:15 வரை**

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 04/10/2015 | சகோ. டேவிட்குமார் | சகோ. ஐசக் துரை |
| 11/10/2015 | சகோ. ஜெயசேகர் | சகோ.சுகுமார் |
| 18/10/2015 | சகோ.ஆரோக்கியதாஸ் | சகோ.கிறிஸ்டோபர் |
| 25/10/2015 | பாஸ்டர். ஜெபசுந்தர் (தமிழ் நாடு) | |

**வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4:30 முதல் 6:15 வரை**

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 02/10/2015 | சகோ. ஆரோக்கியதாஸ் | சகோ. ஜெகநாதன் |
| 09/10/2015 | சகோ. அற்புத ராஜ் | சகோ. ஸ்டாலின் |
| 16/10/2015 | பாஸ்டர். உதயகுமார் (HOLY GOD TV) | |
| 23/10/2015 | உபவாச திருவிருந்து ஆராதனை பாஸ்டர்.ஜெபசுந்தர் (தமிழ் நாடு) | |
| 30/10/2015 | சிறுவர் வேதாகபள்ளி ஆண்டு விழா பாஸ்டர்.ஜெபசுந்தர் (தமிழ் நாடு) | |

8/10/2015 முழு இரவு ஜெபம் இரவு 10 மணி முதல் காலை 2 மணி வரை
இடம் : பரிசுத்த பவுல் ஆலயம் (அஹமதி )

(30/10/2015 அன்று வாலிப ஐக்கிய கூடுகை மாலை 7 மணிக்கு
இடம் : புதிய ஜெப வீடு (பாஹூல்)

00/10/2015 - சகோதரிகள் ஐக்கிய கூடுகை
நாள் – இடம், நேரம் பின்னர் அறிவிக்கப்படும்

(09/10/2015) பொதுமன்ற கூட்டம் – இடம் (ஜெபவீடு பாஹாஹில்)

# 2015 அக்டோபர் மாதத்திற்கான வேத வினா!

**கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**

1. திவ்விய சவுந்தர்யமுள்ளவனாயிருந்தவன் யார்?
2. எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தவன் யார்?
3. ஒருமனப்பட்டு ஜெபத்தில் தரித்திருந்தவர்கள் யார்?
4. மந்தையை தப்பவிடாத கொடிதான ஓநாய்களைபற்றி வாசிப்பதெங்கே ?
5. வேதாமங்களில் வல்லவன் எனப்பட்டது யார்?
6. கர்த்தருக்கு அவர்களை ஒப்புவித்தார்கள் அவர்கள் யார் ?
7. யாருடைய முகம் தேவதூதன் முகம் போலிருந்தது?
8. சகல பட்டினங்களிலும் சுவிஷேசத்தை பிரசங்கித்துக் கொண்டு வந்தவர் யார் ?
9. அந்தியோகியாவிலே சஞ்சரித்து, கர்த்தருடைய வசனத்தை உபதேசித்து பிரசங்கித்து கொண்டிருந்த இருவர் யார் ?
10. தகப்பன் கிரேக்கன், தாய் யூதஸ்திரி, இவர்களுக்கு பிறந்த மகன் யார்?
11. இரத்தாம்பரம் விற்று வந்த ஒரு ஸ்திரி யார்?
12. பவுலை வாயில் அடியுங்கள் என்று சொன்ன பிரதான ஆசாரியன் யார்?
13. தன் வீட்டாரோடு இயேசுவை விசுவாசித்து ஏற்றுக் கொண்ட ஜெபாலயத் தலைவன் யார்?
14. நியாசனத்துக்கு முன்பாக அடிபட்ட ஜெபாலாயத் தலைவன் யார்?
15. கிறிஸ்துவின் சீஷர்களை ஜெப ஆலயங்களில் வைத்து அடித்தவன் யார்?

விடைகளை வருகின்ற 23-10-2015 க்குள் சபையின் செயலாளரிடமோ அல்லது செய்திமலர் பொருப்பாளரிடமோ (நேரிலோ )அல்லது வாட்ஸ்அப்பிலோ (whatsup # 96667068 - with Name ) அனுப்பும்படி (கொடுக்கும்படி) கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். விடைகளை "**அப்போஸ்தலர் நடபடிகள்** "புத்தகத்தில் தேடி கண்டுபிடிக்கவும்

**- - -தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; - -**

மத்தேயு 7:7

கிறிஸ்த்துவுக்குள் அன்பான வாலிப சகோதர மற்றும் சகோதரிகளுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்,

இந்த மாத செய்திமலர் மூலமாக தங்களோடு தொடர்பு கொள்ள தேவன் தந்த நல்ல சந்தர்பத்திற்காக தேவனை ஸ்தோத்தரிக்கின்றேன். நான் சாரோனின் ரோஜாவாயிருக்கிறேன் என்று சாலமோன் ஞானி (உன் 2:1) ல் கூறுகிறார்.பொதுவாக சில வகை பூக்கள் அழகுள்ளதாக இருந்தாலும் அவைகளுக்கு நறுமனம் இல்லை. ஆனால் ரோஜா மலரோ அழகுள்ளதாகவும் அதே சமயம் நற்கந்தம் வீசக்கூடியதாகவும் இருக்கிறது. அதுமட்டுமல்ல மலர்களில் சிறந்தது ரோஜா மலர் என்ற ஒரு தனி சிறப்பும் உண்டு. அது போல ராஜாகவாகிய இயேசு கிறிஸ்துவுக்கு மணவாட்டியாக போகிற நம்முடைய வாழ்க்கையானது ஆவிக்குரிய அழகுடையதாகவும் சுகந்த வாசனை வீசக்கூடியதாகவும், இனிமையுள்ளதாகவும் இருக்க வேண்டும்.

ரோஜா மலரை சுற்றிலும் எப்பக்கத்திலும் முட்கள் இருக்கின்றன. காற்று வீசும் போது, அதன் மென்மையான இதழ்கள் முட்களால் குத்தப்படுகின்றன. அதற்கு பதில் ரோஜா மலர் என்னத்தை கொடுக்கிறது அது சுகந்த வாசனையை அளிக்கிறது. அது போல அஹமதி தமிழ் திருச்சபை வாலிபர்களாகிய நாமும், இந்த கோணலும் மாறுபாடுமான ஜனங்கள் மத்தியில் வாழ்ந்தாலும், அவர்களை மன்னித்து மற்றவர்களுக்கு அன்பு, நற்குணம், சாந்தம், இச்சையடக்கம், தயவு , இரக்கம், பொறுமை, என்கிற நறுமணத்தை வெளிபடுத்துவோம். ரோஜா மலர் தனியாக ஓர் இடத்தில் இருந்தாலும் அதனை தேடி வண்ணத்து பூச்சிகளும். தேனீக்களும் வந்து கோண்டே இருக்கும் அது போல கிறிஸ்துவின் சாயலையும், சுபாவத்தையும் உடையவர்களாக நாம் இருப்போமானால், தேவனுடைய அன்பை ருசிக்கும்படி ஆத்துமாக்கள் நம்மை தேடி வருவார்கள். கர்வாலி மரம் 1000 ஆண்டுகள் உயிர் வாழ்ந்தாலும் அதற்கு அழகும் இல்லை, சுகந்த வாசனையும் இல்லை, அது போல சில கறிஸ்தவர்கள். நாங்கள் இத்தனை வருடம் கிறிஸ்தவர்களாக இருக்கிறோம் என்று தங்களை பெருமைபடுத்தி பேசுகிறார்கள், அவர்களிடம் சுபாவ அன்புமில்லை, கிறிஸ்துவின் கருணையும் இல்லை. ஆனால் ரோஜா மலர் குறைந்த நாட்கள் வாழ்ந்தாலும், அது அழகுள்ளதாகவும், வாசணை வீசுகிறதாகவும், இருக்கிறது,

பிரியமான சகோதரனே, நாம் எவ்வளவு நாட்கள் வாழ்கிறோம் என்பது முக்கியமல்ல, நம்முடைய வாழ்க்கையானது தெய்வீக அழகினாலும், வாசனையினாலும், நிறைந்திருக்கிறதா? என்பதுதான் முக்கியம். கிறிஸ்தவ வாழ்கை என்பது கிறிஸ்துவின் சாயலையும், கிறிஸ்துவின் சுபாவத்தையும் இந்த உலகில் வெளிபடுத்துவதாகும், அகாஸ்வேறு ராஜா மகா ரூபவதியாக இருந்த ராஜஸ்திரியாகிய வஸ்தியினுடைய சௌந்தரியத்தை ஜனங்களுக்கும், பிரபுக்களுக்கும், தேசத்தின் மகத்தானவர்களுக்கும், காண்பிக்கும்படியாய் விரும்பி, வஸ்தி ராஜவஸ்திரமும், ராஜகிரீடமும் தரிப்பிகப்பட்டவளாக வரவேண்டும் என்று கட்டளையிட்டது போல, ராஜாவாகிய இயேசு கிறிஸ்துவுக்கு மனவாட்டியாக போகிற உன்னுடைய இருதயத்திலே மறைந்திருக்கிற கிறிஸ்துவின் சாயபாலை, அவருடைய சுபாவத்தை, அவருடைய சுகந்த வாசனையை, உன் மூலமாக இந்த உலகிற்கு வெளிபடுத்த அவர் விரும்புகிறார்.

ஆகவே பிரியமான சகோதரனே! நீ கிறிஸ்துவின் அழகையும், கிறிஸ்துவின் வாசனையையும், இந்த உலகிற்கு வெளிபடுத்துவாயாக. ஆகவேதான் பவுல் அப்பேஸ்தலன் எல்லா இடத்திலும் எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்" என்கிறார்.(II கொரி 2:14)

வாலிபனே நீ தேவனுடைய தோட்டமாகிய சபையில் மற்றவர்களை நேசிக்காமல் குத்தி புண்படுத்தும் முள்ளாக இருக்கிறாயா? அல்லது கிறிஸ்துவின் சுபாவத்தையும் அவருடைய வாசனையையும் வெளிபடுத்துகிற ரோஜா மலராக இருக்கிறாயா?

சிந்திப்போம் செயல்படுவோம்

கிறிஸ்துவுக்குள்

அன்பு சகோதரன் **இயேசு நாயகம்** (Late)

## வேத வல்லுநர்கள்
## தங்கள் பதில்களை சரிசெய்து கொள்ளவும்

(வசனம் மற்றும் அதிகாரம் )

தேவ தூதனை கண்டு......

உபசரித்தது **(ஆபிரகாம் ஆதி 18:1,5)**

முகங்குப்புற விழுந்து பணிந்தது **(பிலேயாம் – எண் 22:30)**

விண்ணப்பம் பண்ணினது **(தாவீது –2 சாமு 24:17)**

ஒளித்து கொண்டது **(ஓர்நாள் மற்றும் அவனுடைய 4 குமாரர்கள் – 1 நாளா 21:20)**

கேள்வி கேட்டது **(கிதியோன் (நியா 13:21,22)**

கண்டு கலங்கியது **(சகரியா –லூக் 1:11,12)**

சாகவே சாவோம் என்று பயமடைந்தது **(மனோவா நியா 13:21:22)**

# வில்லியம் கௌடி

**(1857 – 1922)**

சென்னை அருகிலுள்ள ஈக்காடு, திருவள்ளூர் பகுதியில் வாழ்ந்த தலித் மக்களை சமுதாய, ஆன்மீக அடிமைத் தனத்திலிருந்து விடுவிக்க பெரும் சவால்கள் மத்தியில் அதிக முயற்சியெடுத்து உழைத்தவர் வில்லியம் கௌடி.

இங்கிலாந்து தேசத்தின் வட பகுதியிலுள்ள ஸ்காட்லாந்து மாநிலத்தில் சென்னர்விக் என்னும் ஊரில் 1857–ம் ஆண்டு மே மாதம் 6–ம் தேதி ஒரு தெய்வ பக்தியுள்ள குடும்பத்தில் பிறந்தார் வில்லியம் கௌடி. கௌடியின் பக்தியுள்ள தாய் தனது மூன்று ஆண் மக்களையும், ஒரு பெண் பிள்ளையையும் கிறிஸ்தவ மார்க்கத்தில் சிறப்புற வளர்த்தார். வேதாகமம் ஒன்றே இக்குடும்பத்திலுள்ள ஒரே புத்தகமாய் இருந்ததால் குடும்பத்தினர் அதனைப் பரிசுத்த நூலாக மதித்து படித்து வந்தனர். கர்த்தருடைய நாளைப் புனிதநாளாகக் கருதி ஆசரிக்க கௌடி பயற்றுவிக்கப்பட்டிருந்தார். தன் தாயாரின் அருகில் அமர்ந்து என் முதல் ஜெபத்தைக் கற்றுக்கொண்டதாக கூறுகிறார் கௌடி. கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் ஜாண் வெஸ்லியின் மூலம் இங்கிலாந்து தேசத்தில் ஒரு உயிர் மீட்சி ஏற்பட்டு, மெதடிஸ்ட் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. கௌடியின் பெற்றோர் மெதடிஸ்ட் இயக்கத்துடன் சேர்ந்து கிறிஸ்துவுக்காக சாட்சியுடன் வாழ்ந்தனர். கௌடியின் தந்தை உள்ளூர் பிரசங்கியானார். கௌடி எட்டு வயதாய் இருக்கும்போது, அவரது தாய் விஷக் காய்ச்சலினால் தாக்கப்பட்டு மரித்துப்போனார். அதிக வேதனையடைந்த கௌடியின் குடும்பம் நியூசிலாந்துக்கு மாறுதல் ஆகி லெர்விக்கு என்ற இடத்தில் வாழ ஆரம்பித்தனர். தனது பள்ளிப்படிப்பை முடித்த கௌடி 1874–ம் ஆண்டு "டிராக்ட் அண்டு புக் சொசைட்டி" என்ற நிறுவனத்தீல் விநியோகஸ்தராகப் பணிபுரிய ஆரம்பித்தார். இக்காலத்தில் மூடி, சாஸ்கி ஆகிய புகழ்பெற்ற எழுப்புதல் பிரசங்கியார்களின் செய்திகளினால் வசீகரிக்கப்பட்டார். தானும் ஒரு ஊழியக்காரனாக வேண்டுமென்ற ஆவல் எற்பட்டது. ஒரு மாலைக் கூடுகையில் மெதடிஸ்ட் சிற்றாலயத்தில் தன்னை முற்றிலும் தேவப்பணிக்காக அர்ப்பணித்தார். 1878–ம் ஆண்டு ஊழியத்திற்கென்று தேர்வு செய்யப்பட்டு 1879–ம் ஆண்டு ரிச்மாண்ட் கல்லூரியில் வேதாகம மாணவராகப் படிக்க "சுர்ரே" என்ற இடத்திற்கு அனுப்பப்பட்டார்.

கடல் கடந்து வெளிநாட்டிற்கு மிஷனெரியாகச் செல்ல ஆர்வம் பெற்ற கௌடியை இந்தியாவுக்கு மிஷனெரியாகச் செல்லப் பணித்தபோது அதிக சந்தோஷத்துடன் அதனை தேவ சித்தமாக ஏற்றுக்கொண்டார். 1882–ம் ஆண்டு ஜனவரி 24–ம் நாள் லண்டனிலுள்ள ஒரு சிற்றாலயத்தில் குருவாக அபிஷேகம் பெற்றார். 1882–ம் ஆண்டு மார்ச் மாதம் சென்னை வந்த கௌடி முதலில் சென்னை ஜார்ஜ் டவுன், பரங்கிமலையிலுள்ள வெஸ்லி ஆங்கிலத் திருச்சபைகளில் ஊழியம் செய்தார். கூடவே பெரம்பூர், ரேணிகுண்டா, திருப்பதி ஆகிய நகரங்களில் வசித்த ரயில்வே பணியாளர் மத்தியிலும் ஊழியம் செய்தார். தமிழ் மொழியை விரைந்து கற்கத் தொடங்கினார். 1883–ம் ஜனவரி மாதம் திருவள்ளூர் கிராமத்தினரிடையே ஊழியம் செய்ய நியமிக்கப்பட்டார். தம் ஊழியத்தின் தொடக்கத்திலேயே ஏழை மக்கள் மீது தம் பரிவினைக் காட்டினார். தலீத் என்றழைக்கப்படுகிற மக்களிடையேயும் ஏழை இந்து மக்களையும் முழு மனதுடன் நேசித்து நற்செய்திச் சொன்னார். 1885–ம் ஆண்டு கௌடி கான்செட் என்ற இடத்தை சேர்ந்த செல்வி எலிசபெத் ரண்ட்லெட்ஜ் என்பவரைத் திருமணம் செய்துகொண்டார். இவர்களது முதல் மகள் மரித்து விட்டபடியால் மிகுந்த துக்கத்திலிருந்த கௌடி குடும்பத்துக்கு அடுத்து ஒரு மகனைத் தந்து தேவன் அசீர்வதித்தார். ஒடுக்கப்படுகிறவர்களுக்கு கௌடி உதவி செய்வதற்கு அவரது மனைவி எப்போதும் பெரிதும் துணைபுரிந்தார். திருவள்ளூர்

அருகிலுள்ள ஈக்காடுப் பகுதிகளில் தனது மிஷனெரிப் பணியை தமிழ் மொழியிலேயே செய்ய ஆரம்பித்தார். தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் சுவிசேஷம் சொன்னபோது உயர்ஜாதி மக்கள் கற்களையும் நாற்றமடிக்கும் சேற்றையும் அவர்மீது அள்ளி வீசினர். கல்லெறியப்படும் பொழுது கௌடி சொன்னது நீங்கள் என்மீது கல்மழையைப் பொழிந்தீர்கள். கடவுள் உங்களுக்கு அரிசி மழையைத் தருவார் என்றார். இந்தக் கற்களால் கடவுள் தம் சபையை எழுப்புவார் என்ற விசுவாசத்துடன் உபத்திரவத்தைச் சந்தித்தார்.

கிறிஸ்துவுக்குள் அவர் பட்ட பிரயாசத்தின் பலனாக 1899-ம் ஆண்டு ஈக்காடு ஆலய அடிக்கல் நாட்டுவிழா நடத்தப்பட்டு, 1902-ம் ஆண்டு ஆலயம் பிரதிஷ்டையும் செய்யப்பட்டது. (சி.எஸ்.ஐ வெஸ்லி ஆலயம், ஈக்காடு). தாழ்த்தப்பட்ட தலித் ஏழை மக்கள், நிலச்சொந்தக்காரர்களுக்கு (மிராஸ்தாரர்களுக்கு) விவசாயக் கூலிகளாக இருந்தனர். வறுமையின் காரணமாக தாங்கள் வாங்கிய கடனுக்காக தம் வாழ்நாளெல்லாம் கொத்தடிமைகளாகப் பிணைப்பட்டுக் கிடந்தனர். கௌடி இதற்காக விசேஷக் கவனம் செலுத்தி அரசிடம் போராடி நிலங்களை அவர்களுக்காகப் பெறும்படிசெய்தார்.

அதுமட்டுமல்ல தாழ்த்தப்பட்ட மக்கள் பொதுக் கிணறுகளை பயன்படுத்தக்கூடாது என்ற கிராமங்களில் பொதுக் கொள்கையாக இருந்தது. ஏழை மக்களுக்காக உதவும்படி பல கிணறுகளை தோண்ட ஏற்பாடு செய்தார். பலர் ஜாதி மத பேதமின்றி எல்லாரும் இவர் தோண்டிய கிணறுகளை பயன்படுத்தினர். ஈக்காட்டிலிருந்து 4 கிலோ மீட்டர் தொலைவில் நாசரேத் என்ற மாதிரி கிராமத்தை அமைத்தார். அதில் 6 குடும்பங்களை குடியேற்றி 1920-ம் ஆண்டில் ஒரு ஆலயமும் கட்டி பிரதிஷ்டை செய்தார். பெரும்பாலும் கௌடி நடந்து சென்று ஊழியம் செய்தார் சில சமயம் ஆற்றைக்கடந்தும் சென்று ஊழியம் செல்லும்படி ஏற்பட்டபோதும் அவருடைய ஊழியத்திற்கு தடையாக எதுவும் அமையவில்லை. கிராம மக்கள் அளிக்கும் சுடுகஞ்சியை கைகளிலோ தொப்பியிலோ வாங்கி குடிப்பார்.

ஈக்காடு கிராம மக்களுக்காக ஒரு மருத்துவ மனை அமைத்தார். 1897-ல் மகப்பேறு வார்டுகளும் கட்டப்பட்டன. கிராமப்புறங்களில் பெண்கள் அதிகமாக நேரத்தை வீணடிப்பதிலும், மூடப்பழக்க வழக்கங்களைப் பின்பற்றுவதிலும் கவனமாய் இருப்பதைப் பார்த்த கௌடி அவர்களுக்கு சுவிசேஷம் சொல்லப் பெண் ஊழியர்களை நியமித்தார். ஊழியங்கள் வளர வளர விசுவாசிகளுக்கு முறையான வேத அறிவு ஊட்டிட தலைவர்களைத் தேர்வுசெய்ய ஒரு பயிற்சி மையமும் கிண்டியில் அமைத்தார். கௌடி லண்டன் மெதடிஸ்ட் வட்டார மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டு 1906-ம்ஆண்டு சென்னையை விட்டு இங்கிலாந்து சென்றார். எனினும் கௌடி தம்பதியினர் ஈக்காடு மிஷனை மறந்துவிடவில்லை. ஈக்காடு திருப்பணியாளர்களுக்கு அடிக்கடி ஊக்கக் கடிதங்களை எழுதினார். 1914-ம் ஆண்டு பொதுச் செயலாளராகி மேற்கு ஆப்பிரிக்கா, மற்றும் உள்நாட்டு நிறுவன விவகாரங்களைக் கவனிக்கலானார். 15 ஆண்டுகளுக்குப் பின் இந்தியாவிற்கு வருகை தந்து 4 வாரங்கள் தங்கியிருந்து தான் ஊழியம் செய்த இடங்களை சந்தோஷத்துடன் பார்வையிட்டு அதன் வளர்ச்சியைக் கண்டு சந்தோஷமடைந்தார். முதல் உலகப்போர் தொடங்கியபோது கௌடியின் மூன்று ஆண்மக்களும் படையில் போர்வீரர்களாகத் தொண்டாற்றினர். கௌடியின் இரு ஆண்மக்களும் யுத்தத்தில் மரித்துப்போனார்கள். கௌடியின் உள்ளம் நொறுங்கியது. வேத வசனம் மட்டுமே கௌடி தம்பதியினரை ஆறுதல் படுத்தியது. 1922-ம் ஆண்டு ஏப்ரல் 9-ம் தேதி ஒரு குருத்தோலை ஞாயிறன்று கௌடி கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

(தொகுப்பு)

கிறிஸ்துவுக்குள்அன்பு சகோதரர் **சுகுமாரன்**

# சோதனையில் வெற்றி

கிறிஸ்துவுக்குள் பிரியமான அன்பு சகோதரிகளுக்கு உயிர்த்தெழுந்தஇயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த மாதத்தின் செய்தி மலரில் சகோதரிகள் பகுதியின் மூலமாக தங்களை சந்திப்பதில் ஆண்டவருக்குள் மகிழ்ச்சி அடைகிறேன்,கிறிஸ்துவுக்குள் பிரியமான அன்பு சகோதரிகளே! இந்த மலர் மூலம் பரிசுத்த ஆவியானவரால் அருளப்பட்ட வார்த்தைகளில் இரண்டு வார்த்தைகளை குறித்து தங்களுடன் சேர்ந்து அடியாளும் தியானிக்க கர்த்தர் அருள் புரிவாராக!

## முதல் வார்த்தை

சோதனையைச் சகிக்கிற மனு(ஷி)ஷன் பாக்கியவான், அவன்(ள்) உத்த(மி)மனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்.(வாள்)(யாக்கோபு 1:12) பிரியமான சகோதரிகளே ஆண்டவருடைய வசனம் அவரால் உண்டாக்கப்பட்ட ஆதாமுக்கும் பொருந்தும் ஏவாளுக்கும் பொருந்தும் அல்லவா? ஆகவேதான் அதை இப்படி எழுதியிருக்கிறேன். அன்பான சகோதரிகளே வேதத்தில் அனைவருக்கும் நனற ாக தெரிநத் பகுதி இநத் பகுதியை குறிதது் இநத் லெநது் நாடக் ளிலே தியானிபப்து பொறுத்தமாக இருக்கும் என்று கர்த்தருக்குள் நான் விசுவாசிக்கிறேன்.

ஆண்டவராகிய "இயேசு பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவராய் யோர்தானை விட்டுத் திரும்பி,ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டு, நாற்பது நாள் பிசாசினால் சோதிக்கப்பட்டார் என்று லூக்கா 4 ஆம் அதிகாரத்தில் இதை குறித்து வாசிக்கிறோம். ஆண்டவருக்கும் சோதனை காலம் இருந்ததுஆண்டவரை சோதிக்க சாத்தான் எம்மாத்திரம் ஆனாலும் ஆண்டவர் அதற்கு இடம் கொடுத்தார் ஏனெனில் ஆண்டவருடைய நாமம் மகிமைபட வேண்டும் என்ற ஒரே நோக்கம் ஆண்டவர் நினைத்திருந்தால் சாத்தானை ஒரு நொடியில் ஒன்றும் இல்லாமல் இல்பொருளாக மாற்றியிருப்பார் அதுவல்ல ஆண்டவரின் நோக்கம் தேவ பிள்ளைகள் அவரது அடிச்சுவடிகளை பின்பற்றக்கூடியவர்கள் என்று அந்த நேரத்தில் தேவன் சாத்தானுடைய சோதனைக்கு தன்னைதானே உட்படுத்திக்கொண்டார். ஆகவே ஆண்டவர் சாத்தானுக்கு அடிபணிந்தார் என்று நினைத்தால் நம்முடைய அறியாமைதான் காரணம். ஆண்டவரை பார்த்து சாத்தான் அதே அதிகாரத்தில் தன்னை பணிந்து கொள் இந்த உலகத்தின் அனைத்தையும உன் ஆளுகையின் கீழ் கொண்டு வருகிறேன் என்றான். இந்த புவி அவரால் படைக்கப்பட்டது என்று அவனுக்கு அறியாதது அவனுடைய அறியாமை.

பிரியமானவர்களே இன்றும் நமக்கும் அப்படிதான் தேவ பிள்ளைகளின் வாழ்க்கையில் சுலபமாக சாத்தான் சோதனையை கொண்டு வருகிறான். ஆனாலும் எப்படி தேவன் சகித்து கொண்டு சாத்தானை தோற்கடித்தாரோ அதே போல சாத்தான் நம்மை கண்டு வெட்கப்படும்படியாக எப்படி ஆண்டவர் சாத்தானை பாரத்து பின்னாகப் போ சாத்தானே. என்று அவனை கடிந்து கொண்டதுமல்லாமல் ஆண்டவர் ஒருவருக்கே ஆராதனை செய் என்று எழுதியருக்கிறதே என்று அவனுக்கு ஆண்டவருடைய

மகிமையை குறித்து விளக்குகிறார். இந்த காரியத்தை குறித்து லூக்கா 4:8 இப்படியாக வாசிக்கிறோம் இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: எனக்குப் பின்னாகப்போ சாத்தானே, உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்.

பிரியமான சகோதரிகளே ஒரு சில நேரங்களில் நம்முடைய வாழ்க்கையிலும் கூட சாத்தான் (சாத்தானை போல)தரமே இல்லாத மனிதர்கள் மூலம் நமக்கு சோதகைளை கொண்டு வருவான். அந்த நேரங்களில்ஆண்டவருக்கு நேர்ந்தது போல நமக்கும் நேரிடலாம், என்ன என்று பாரத்தோமானால் தேவன் சோதிக்கப்படும் பொழுது பிதா கூட அவரை இமை பொழுது கை விட்டார் அதுவும் அந்த இடத்தில் பிதாவின் நாமம் மகிமைப்படும்படியாகத்தான் அது போல நாம் நம்பின நமக்கு உரித்தவர்கள் கூட கைவிட்டு விடலாம் நாம் நம்முடைய நாதர் இயேசுவை முன் நிறுத்தி நாம் நமக்கு வந்த சோதனையை சகித்து கொள்வோம் ஆண்டவர் அருளிய ஜீவ கிரீடத்தை பெற்றுக் கொள்வோம்.

## இரண்டாவது வார்த்தை

மனுஷனை நம்புவதைப்பார்க்கிலும், கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்.(சங் 118:8) பிரியமான சகோதரிகளே! நாம் மனுஷர்களை நம்புவதை பார்க்கிலும் கர்த்தர் மேல் அதிக நம்பிக்கை வைக்கும் போது அவர் நம்மை எப்பேற்பட்ட காரியமானலும் சரி நம்மை விடுவிக்க வல்லவர். பிரியமான சகோதரிகளே வேதத்தில் நாம் எடுத்துக் கொண்டோமானால் யோசேப்பு தான் செய்யாத ஒரு குற்றத்திற்காக பார்வோனின் சிறைச்சாலையிலே தண்டனை அனுபவித்து கொண்டிருக்கிறார், அந்த நேரத்தில் பானபத்திரக்காரன் ஒருவனின் நட்பு கிடைக்கிறது. அவன் அந்த பானபத்திரக்காரனிடம் தன்னை பற்றி பார்வோனிடம் சொல்லி தன்னை விடுவிக்க கேட்டுக் கொள்கிறான், பிரியமான சகோதரிகளே நடந்தது என்ன? அந்த பானபாத்திரக்காரன் அவனை மறந்து விடுகிறான். நாம் நம்பும் மனிதர்கள் நம்மை கைவிட்டுவிடுவார்கள் இதுதான் மனித அன்பு, நமக்கு உரிமையானவர்கள் கூட நம்மை கைவிட்டு விடலாம் ஆனால் நம்மை பெயர் சொல்லி அழைத்த தேவன் நம்மை கைவிட மாட்டார்.குறித்த நேரத்திலே யோசேப்பை பற்றி பார்வோனுக்கு தெரிய வருகிறது, அவர் அவருடைய சொப்பனத்திற்கு சரியான விளக்கம் அளிக்க,அந்த தேசத்திலேயே அவர் பார்வோனுக்கு அடுத்த ஸ்தானத்தில் பிரதான அமைச்சராக அமர தேவன் அருளினார். பிரியமானவர்களே மனிதர்கள் நம்மேல் செலுத்தும் அன்பு சற்று நேரத்தில் மாறிவிடும் ஆனால் தேவன் நம்மேல் வைத்த அன்பு என்றும் மாறாததாய் இருக்கிறது. மனிதன் முகத்தை பார்க்கிறான் தேவனோ இருதயத்தை காண்கிறார். உண்மையிலேயே தேவனை நம்பி தேவன்பால் நாம் பற்றுதலாய் இருக்கும் போது தேவன் நம்மை ஏற்றநேரத்தில் உயர்த்த அவர் உண்மையுள்ளவர். நாமும் தேவனை சார்ந்து இருப்போம்

தேவன் நம்மை ஆசீர்வதிப்பாராக!

# கடந்த மாத நிகழ்வுகளில் தங்கள் பார்வைக்கு சில



## உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக ஜெபியுங்கள்

செயற்குழு உறுப்பினர்கள்

**தலைவர் - சகோ. ரவிச்சந்திரன்**

23913675 - 66889706

**செயலாளர் - சகோ. ஜெயசேகர்**

23711698 - 96646444

**பொருளாளர்- சகோ. ஆரோக்கியதாஸ்**

99870126

**வாலிப ஐக்கிய தலைவர் - சகோ. அற்புதராஜ்**

60692485

Church Website Address - ahmaditamilcongregation.org

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

தங்களது ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Private Circulation only